**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை** : திரு மா. சந்திரமோகன், B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.48/2024**

CNR.No.TNMY07-000058-2024

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, மற்றும் முன்சீப் திருநன்றியூர், வடக்கு தெரு என்ற முகவரியில் வசித்து வரும் கணேசன் குமாரர் 67 வயதுள்ள ஜி. அண்ணாதுரை.

**...வாதி**

....எதிர்....

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, 78 சேமங்கலம் வட்டத்தில் , சேமங்கலம், வடக்குத் தெருவில் வசிக்கும் செல்லப்பன் குமாரர் 45 வயதுள்ள குமார் (எ) முத்துக்குமார். **..பிரதிவாதி**

வழக்குரையில் கண்ட தொகை ரூ.11,283/- அசல் தொகை ரூ.10,000/-க்கு பின் வட்டியுடன் வாதிக்கு எதிர்வாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிட கோரியும், வழக்கு செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும் படி உத்தரவிட வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 28.03.2024 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 01.04.2024 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் மற்றும் இடம் | 03.03.2023, 26.02.2024, 27.02.2024 ஆகிய தேதிகளில் சீர்காழி தாலுக்கா திருநன்றியூர் கிராமத்தில் உற்பத்தி |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | வழக்கு பிராமிசரி நோட்டு அசல் தொகை ரூ.10,000/-க்கு 12% வீதம் கூடுதல் தொகை ரூ.11,283/-க்கு நீ.ம.க.ச. பிரிவு 22 ன் படி ரூ.338/-செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக இன்று 06.04.2026 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியிருந்து, பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாலும், வாதி தரப்பில் வழக்கை மேல் நடத்த தயாராக இல்லை என்று மனு செய்து, அம்மனு பதிவு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதை அனுசரித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதி வழக்கறிஞர், மேற்படி வழக்கை வாதி தொடர்ந்து நடத்த விருப்பமில்லாததால் வழக்கை Not press செய்து கொள்வதாக மனு செய்து, அம்மனு பதிவு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதை அனுசரித்து இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை:</u>**
அசல் வழக்கு எண். 48/2024
நாள் – 06.04.2026.